(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/73)-ன் மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை மின்சாரத் துறை அமைச்சர் அளித்தல்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/73)-ன் மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை நான் அளிக்கின்றேன்.

2. தகவல் கோரல்

(அ) 8—8—1973-ம் நாள் மகளிர் மாடத்திலிருந்து ஒரு பெண் துண்டறிக்கைகளை வீசியெறிந்த நிகழ்ச்சி பற்றிய விவரங்கள்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I would like to raise one question. Yesterday, one visitor has been dealt with by this House and some action has been taken on the ground that some leaflets were dropped inside the Chamber. I want to know whether any investigation has been conducted as to the Member who has given the Visitors' gallery pass to that person who has committed that grave mistake. Was any enquiry conducted? Of course, I agree the House is supreme. A motion has been passed and carried in the House to that effect. I only request that the House may be informed about the details of the yesterday's incident, which has happened inside the House. I want a clarification as to the hon. Member who has introduced her and also the Party to which he belongs and whether any investigation has been conducted by the Hon. Speaker before dealing with that person so that the House may have the advantage of knowing what are the rules and regulations, the hon. Members should follow while issuing passes to the visitors.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையில் நடந்த நிகழ்ச்சியையொட்டி நாம் எடுத்த நடவடிக்கை தவிர வேறு எந்த விதமான நடவடிக்கையும் நாம் எடுத்துக் கொள்ளவில்லை. அந்த